
வெள்ளிக்கிழமை பிறந்தவளே!

தலைவர் கலைஞர்



வேர்களைத் தேடி!



தலைவர் **கலைஞர்**

தலைமைக் கழக வெளியீடு:

திராவிட முன்னேற்றக் கழகம்

"அண்ணா அறிவாலயம்"

367 - 369, அண்ணா சாலை,

சென்னை - 600 018.

முதற்பதிப்பு : பிப்ரவரி 2006

விலை : ரூ.5/-

33378
658.8115
வஸ்த

அச்சிட்டோர் : பரணி லேசர் பிரிண்ட்ஸ்
196, பீட்டர்ஸ் சாலை
சென்னை - 600 014.
தொலைபேசி : 55140147

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

(12–2–2006 அன்று செஞ்சியில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சார முதல் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை)

தி.மு.கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள முற்போக்குக் கூட்டணி, வர இருக்கின்ற பொதுத் தேர்தலில் ஈடுபடுகின்ற நிலைமையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவது என்று எடுத்த முடிவிற்கிணங்க முதல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை இன்றைக்கு செஞ்சியில் நடத்திக் கொண்டிருக்கிறோம். தம்பி பொன்முடி இங்கே பேசும்போது குறிப்பிட்டதைப் போல இந்தக் கூட்டத்தை செஞ்சிக் கோட்டையில் நடத்துவதற்குக் காரணமே நம்முடைய உணர்வுகளின் வெளிப்பாடாக செஞ்சிக் கோட்டையில் தொடங்கி சென்னை கோட்டை வரையிலே வெற்றிக் கொடி பறக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

செஞ்சி பகுதியே எழுச்சி கொள்கிற அளவிற்கு பல்லாயிரக்கணக்கில் தாய்மார்களும், பெரியோர்களும், விவசாயத்தை நம்பி வாழ்கிற மக்களும், சாமானியர்களும், சாதாரணமானவர்களும் தொழில் புரிந்து வாழ்பவர்களும் இன்றைக்கு வியர்வை சிந்தாவிட்டால் நம்முடைய பசி

அடங்காது என்கிற அளவிற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிற பாட்டாளிப் பெருமக்களும் சூழ்ந்த பகுதி என்பதை நான் நன்றாக அறிவேன். எனவேதான் செஞ்சியைத் தேர்ந்தெடுத்த தற்குக் காரணமே இது தமிழக வரலாற்றில் ஒரு சிறப்பான வீரம் மிகுந்த இடத்தைப் பெற்ற மண்ணாகும். வீரத்தைப் போலவே நட்பின் சிறப்பை, உயர்வை எடுத்துக் காட்டிய மண்ணும் செஞ்சி மண்ணாகும்.

இந்த மண்ணை ஆண்டவன் தேசிங்கு ராஜன். அவனுடைய அருமைத் தோழன், இசுலாமிய சமுதாயத்தில் பிறந்த முகம்மது கான் மணமேடையிலே வீற்றிருந்த நேரத்தில் – தன்னுடைய வாழ்க்கைத் துணைவியை கரம்பிடிக்கின்ற நேரத்தில் – செஞ்சிக் கோட்டை தாக்கப்படுகிறது என்ற செய்தி கேட்டு தன்னுடைய நண்பன் தேசிங்கு ராஜன் என்ன ஆனானோ என்று பதைத்து, அவனுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காக போர் முனையிலே அவனோடு சேர்ந்து நின்று எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மணவிழாவை மறந்துவிட்டு புதிதாக தன்னுடைய இல்லத்திற்கு வருகின்ற அந்தப் புதிய வரவைப் பற்றிக் கவலைப்படாமல்; ஒரு பெண்ணின் மனம் புண்படுமே என்றுகூடக் கவலைப்படாமல் அந்த மண்ணின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தன்னுடைய ஆருயிர் நண்பன் தேசிங்கு ராஜனுக்கு தன்னுடைய நட்புக் கடமையை ஆற்ற வேண்டும் என்பதற்காக ஓடோடி சென்று தேசிங்கு ராஜனின் தோளோடு தோள் நின்று போர் புரிந்து அந்தப் போர் முனையிலேயே முகம்மது கான் மாண்டான். 'நீ மாண்ட பிறகு

நான் இருந்து பயன் என்ன' என்று நண்பன் தேசிங்கு ராஜனும் மாண்டான்.

இந்த மண் இந்து - முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக்காட்டும் மண்

இந்த மண் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலே ஒளி விட வேண்டிய நட்பை, ஒற்றுமையை, உறுதியை எடுத்துக்காட்டுகிற மண்ணாகும். இன்று நம்முடைய கூட்டணியிலே இருக்கின்ற கட்சிகளும் நம்மை மத்தியிலே இருந்து ஆண்டு வருகிற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், அந்தக் கூட்டணிக்கு பிரதமராக இருக்கின்ற மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்களும், அந்தக் கூட்டணிக்கு அரசு வழியிலே வழிகாட்டும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களும் அந்தக் கூட்டணிக்கு முற்போக்கான கருத்துக்களை எடுத்துச் சொல்லி; தெரிந்தோ தெரியாமலோ தவறுகள் நடைபெறுகின்ற நேரத்தில் நேரான பாதையில் அரசு நடக்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டு, பணியாற்றி, ஆலோசனைகளைச் சொல்லி

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்ற திருக்குறளைக் காட்டி இடித்துரைப்பதுதான் எதிர்க்கட்சிகளின் வேலை; அதைவிட பொறுப்பு வாய்ந்த வேலை ஆதரவளிக்கின்ற எதிர்க்கட்சிகளின் வேலை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இடதுசாரிக் கட்சிகள்,

கம்யூனிஸ்டுகள். அந்தக் கட்சிகளுக்கு இணையான வகையிலே, தமிழகத்திலே பொதுவுடைமைப் பூங்கா உருவாக வேண்டும் என்று இந்நாள் அல்ல; பல நாட்களாக, பல ஆண்டு காலமாக பாடுபட்டுக் கொண்டிருக்கிற தந்தை பெரியார் வழியிலே வந்த பேரறிஞர் அண்ணா வழியிலே வந்த தி.மு.கழகம். அந்தக் கழகத்தின் சார்பிலே பொறுப்பேற்றி ருக்கின்ற மத்திய அமைச்சர் பெருமக்கள் உங்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தின் சார்பிலே வீற்றிருப்பவர்கள், அத்தனை பேரின் ஒத்துழைப்போடு இன்றைய தினம் இந்தியத் திருநாட்டிலே ஒரு மகத்தான மதச் சார்பற்ற, மத நல்லிணக்க ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த மத நல்லிணக்கத்தை எடுத்துக் காட்ட ஒரு சின்னம் தேவை என்றால் அது ராஜா தேசிங்கு – முகம்மது கான் என்ற அந்த நண்பர்களுடைய உருவங்கள் பொறித்த சின்னங்கள் தான். அத்தகைய புனிதமான பூமி. குருதி சிந்தி ஒரு கொள்கையை அடையாளம் காட்டிய பூமி செஞ்சி பூமி. அந்த பூமியிலே இன்றைய தினம் உங்களையெல்லாம் நான் சந்திக்கின்றேன் என்றால் பொன்முடி இங்கே பேசும்போது சொன்னார் நான் திருவண்ணாமலைக்கு திருமணத்திற்குச் செல்கின்ற வழியில், தலைவர் கலைஞர் அவர்களை இங்கே நிறுத்தி இந்தக் கூட்டத்தை நடத்துகிறேன் என்று சொன்னார். அது தவறு, அவர் திருத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கூட்டத்திற்கு வருகின்ற காரணத்தால்தான் நாளை காலையில்

திருமணத்திலே கலந்து கொள்கிறேன். ஏனென்றால் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தை முதன்முதலாக எங்கே தொடங்குவது என்று எண்ணியபோது நான் பொன்முடியிடம் சொன்னேன் நம்முடைய தலைமைக் கழகத்தில் இருக்கின்ற பொருளாளரிடமும், தம்பி துரை முருகனிடத்திலும் சொன்னேன்.

செஞ்சியிலிருந்து எனது தேர்தல் சுற்றுப் பயணத்தை தொடங்குகிறேன்

செஞ்சியில் தொடங்கி இந்த இரண்டு மூன்று மாதகாலம் நான் சுற்றுப் பயணத்தை வகுத்துக் கொண்டு ஈடுபடப் போகிறேன் என்று சொன்னேன். அந்த முதல் கட்ட முயற்சிதான் செஞ்சியில் இந்தப் பொதுக்கூட்டமாக (பலத்த கைதட்டல்) இன்றைக்கு முகிழ்த்திருக்கிறது.

தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களை இன்றைக்கு இங்கே நடத்துவதைப்போல தொடர்ந்து ஒவ்வொரு ஊரிலும் இதேமுறையில் நடத்தக்கூடாது என்று நடத்தி விட்டவர்களுக்கு அல்ல, இனி நடத்த இருப்பவர்களுக்கு நான் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். அறிவுரை கூற விரும்புகிறேன். அன்புக் கட்டளை பிறப்பிக்க விரும்புகிறேன்; உரிமை இருக்கிற காரணத்தால். என்ன வென்று கேட்பீர்கள்? இந்த மேடையிலே ஏறத்தாழ நான் செஞ்சியிலே நுழைந்ததில் இருந்து இதுவரையில் 500 சால்வைகளாவது எனக்கு அணிவித் திருப்பீர்கள், 500 துண்டுகளாவது அணிவித்திருப்பீர் கள், நான் அவற்றைப் பெறுவதற்கு, அதனை இங்கே நீங்கள் எனக்கு தருவதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தை மறந்துவிடக்கூடாது.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் நான் ஈடுபடும்போது ஒரு நாளில் 4 அல்லது 5 கூட்டங்கள் என்ற அளவில் பொதுக் கூட்டங்களில் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஒரே ஊரில் 500 சால்வைகளை, துண்டுகளை பெற்றுக் கொண்டு உட்கார்ந்திருந்தால், ஒரு 4 அல்லது 5 பேர் எனக்கு முன்னாலே பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால் இதையெல்லாம் விட பேசுகின்றவர்கள் குரல் யாருடைய காதிலும் விழாமல் பட்டாசு வெடி ஒரு பக்கத்தில் வெடித்துக் கொண்டிருந்தால், கூட்டம் கூட்டிப் பயனில்லை. எனவே இன்றைக்கு நான் இங்கே சொன்ன அறிவுரைகளை வேண்டுகோளாக ஏற்றுக் கொண்டு இங்கே வந்திருக்கின்ற வெளியூர் தோழர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துகின்றபோது எளிமையாக, சிக்கனமாக, காவல்துறையினர் விதித்திருக்கின்ற அந்த நேரக் கட்டுப் பாட்டை மதித்து, சட்டத்தை மதித்து, விரைந்து சொற் பொழிவாளர்கள் பேசி முடித்துவிட்டு அடுத்த நிகழ்ச்சிக்கு செல்லுகின்ற வகையிலே வழி செய்து கொடுத்து கூட்டங்களை நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் 70 அல்லது 80 நாட்களில் நாம் தேர்தலை சந்திக்க வேண்டி இருக்கிறது. நீங்கள் எல்லாம் வாக்குச் சாவடிக்கு செல்ல வேண்டி இருக்கிறது, அதற்கு இடைப்பட்ட காலத்தில் உங்களை நான் சந்திக்கவும், என்னைப்போலவே நம்முடைய கழகத்தின் முன்னோடிகள், அடுத்த கட்ட தலைவர்கள், உங்களைச் சந்திக்கவும் அத்தகைய பிரச்சாரங்களிலே தி.மு.கழகம் மாத்திரமல்லாமல் ஜனநாயக முற்போக்குக்

கூட்டணியில் இணைந்திருக்கின்ற ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களும், பேச்சாளர்களும் உங்களைச் சந்திக்கவும் அவர்கள் தருகின்ற விளக்கங்களை நீங்கள் செவி வழி கொண்டு சிந்தையிலே தேக்கி வைக்கவும், அப்படி தேக்கப்பட்ட அந்த நினைவு வெள்ளத்தை தேர்தல் நாளில் பயன்படுத்தவும் அப்படி அதை பயன்படுத்துவது இந்த நாட்டின் நன்மைக்காக எதிர்கால சந்ததியினருக்காக புதிய தமிழகத்தை, தூய்மையான தமிழகத்தை, அழுக்கில்லா தமிழகத்தை, அசிங்கமில்லாத தமிழகத்தை, அநாகரிகமில்லாத தமிழகத்தை, பண்பாடு மிக்க அரசியல் நடக்கின்ற தமிழகத்தை உருவாக்க வேண்டு மேயானால் இன்றைக்கு இருக்கின்ற அசுத்தங்களை நீங்கள் போக்கியாக வேண்டும்.

பொங்கல் நாளில் என்ன செய்வீர்கள்? மறுநாள் பொங்கல் என்றால் முதல் நாள் போகி கொண்டாடுகிறோம். போகி என்றால் அதை ஒழுங்காக உச்சரிக்க வேண்டும் என்றால் 'போக்கி'; நம்முடைய வீட்டில் இருக்கின்ற அழுக்குகளை தும்பு, தூசிகளையெல்லாம் போக்கி மறுநாள் பொங்கல் கொண்டாடு கின்றோம். அதைப்போல் தமிழன் கொண்டாட வேண்டிய இன்பப் பொங்கல், இந்தப் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் இருக்கின்ற அழுக்கை போக்கிவிட்டு பொங்கல் கொண்டாட வேண்டும். இருக்கின்ற அழுக்கு எது என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அந்த அழுக்கினால் வந்திருக்கின்ற ஆபத்துக்களை அபவாதங்களை தமிழகத்திற்கு கிடைத் திருக்கின்ற தரமற்ற ஆட்சியை எப்படி வீட்டுக்கு அனுப்புவது

என்பதை புள்ளி விவரங்களோடு ஆதாரப் பூர்வமாக நம்முடைய ஆர்க்காடு வீராசாமி அவர்களும், துரைமுருகன் அவர்களும், மத்திய அமைச்சர் வேங்கடபதி அவர்களும் நான் இங்கே வருகின்ற நேரத்திலே உரையாற்றிக் கொண்டிருந்த நெல்லிக்குப்பம் புகழேந்தியும், தம்பி பொன்முடியும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

நான் அவைகளைப் பற்றியெல்லாம் மீண்டும் மீண்டும் உங்களிடத்திலே சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. என் எதிரே பார்க்கின்றேன். பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக் கின்றீர்கள். இதிலே பலர் அழுக்கு ஆடையோடு கந்தல் உடையோடு இன்னும் சொல்லப்போனால், உடை இருந்தால் அல்லவா அது கந்தலா இல்லையா? என்று சொல்கின்ற அளவில் சட்டையில்லாத தேகத்தோடு இன்னமும் சுதந்திர இந்தியாவில் வீற்றிருக்கின்ற காட்சியை நாம் காணுகின்றோம். இந்தக் காட்சி நம்முடைய தமிழகத்தில் இனிமேல் காணுகின்ற காட்சியாக இருக்கக் கூடாது என்ற திடமான எண்ணத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் உருவான தி.மு.கழக ஆட்சியில் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்கின்ற உறுதியை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றினோம். ஆனால் நம்முடைய வாய்ப்பற்ற நிலை இரண்டே ஆண்டுகளில் அண்ணாவை இழந்தோம். அதற்குப் பிறகு அந்தப் பெரும் பொறுப்பை நான் சுமந்து உங்களுக்காக சுற்றிச் சுழன்று பணியாற்றினேன். நான் பணியாற்றிய காலத்தில் என்னென்ன

சாதனைகள் தமிழ்நாட்டு மக்களுக்காகச் செய்யப்பட்டன என்பதை பெரிய அளவிலே உங்களிடத்திலே நான் விவரிக்க நேரமில்லா விட்டாலுங்கூட ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன்.

பல லட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் நில உடைமையாளர்களின் நிலங்களிலே குடியிருந்தார்களே, அந்தக் குடியிருப்புகளுக்கு குடியிருப்பு மனை என்று பெயர். அந்தக் குடியிருப்பு மனைகளை நில உடைமையாளர்கள் பொறுப்பிலே வைத்துக் கொண்டு பட்டாக்களை அவர்களுடைய பெயரிலே வைத்துக் கொண்டு பாத்தியதை அவர்களுக்கு என வைத்துக் கொண்டு ஏதோ குடியிருக்கலாம்; வெளியே போகச் சொல்கிற நேரத்திலே வெளியே போக வேண்டும் என்ற ஒரு திரிசங்கு சொர்க்க நிலையினை இந்த நாட்டில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூலிகள் என்ற பெயரால் அந்த வயல்களிலே வேலை செய்கின்றவர்கள் என்ற பெயரால் அந்தப் பண்ணையாரிடத்திலே பணியாற்றுகின்ற பணியாட்கள் என்ற பெயரால் அவர்கள் இருந்த அந்தக் காலத்திலேதான், உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்த காலகட்டத்தில் குடியிருப்பு மனைச் சட்டம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டப்படி "ஒரு நில உடைமையாளருடைய நிலத்திலே வேலை செய்கின்ற குடியானவர் அல்லது தொழிலாளி அந்த நிலத்திலே வாழ உரிமையுடையவர். அவர்களை காலி செய்ய சொல்லக் கூடிய உரிமை அவர்களை அங்கே குடிவைத்த உரிமையாளர்

களான அந்த நிலப் பிரபுக்களுக்குக் கிடையாது. அதிலே குடியிருப்பவர்களுக்குத் தான் அந்தக் குடியிருப்பு சொந்தம். அதிலே அவன் வாழவும், அதைவிட்டு வெளியேறவும் எடுத்துக் கொள்ளக் கூடிய உரிமை, அதிகாரம் அவனுக்குத் தான்'' என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் ஏறத்தாழ தமிழ் நாட்டிலே மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு குடியிருப்பு சொந்தமாயிற்று அன்றைக்கு.

ரத்த ஆறு ஓடியும் கிடைக்காத உரிமை ஒரு துளி மையினால் கிடைத்தது

அந்த குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக ஆக்கிய விழா தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டியில் நடை பெற்றது. அந்த விழாவில் யார் யார் கலந்து கொண்டார்கள் தெரியுமா? உழவர் பெருமக்களுக்காக உங்களைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்காக உழைத்து உழைத்து ரத்தம் சிந்திய மணலி கந்தசாமி என்கிற மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் கலந்து கொண்டார். பலமுறை சிறைச்சாலைக்குச் சென்றவர். அவரை வேட்டையாடிப் பிடிப்பதற்கு அன்றைக்கு இருந்த வெள்ளைக்கார சர்க்கார் துப்பாக்கியோடு அலைந்தது. நான் கலந்து கொண்ட அந்த விழாவிலே மாவீரர் மணலி கந்தசாமி கலந்து கொண்டு பேசினார். ''பல்லாயிரக் கணக்கான தோழர்கள் ரத்தம் சிந்தி ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியும் கிடைக்காத உரிமையை கருணாநிதி ஒரு துளி மையினால் உத்தரவிட்டு அந்த உரிமையை எங்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறார். லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு

அந்தக் குடியிருப்பு மனைகள் சொந்தமாக ஆகிவிட்ட காரணத்தால் இன்று இரவு அவர்களுடைய குடிசைகளில் நிம்மதியாகத் தூங்குவார்கள்'' என்று குறிப்பிட்டார்.

அதைவிட வேறு மகிழ்ச்சி என்ன வேண்டி இருக்கிறது? அதைப்போலத்தான் தமிழகத்தில் கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்து கிராமம் கிராமமாக, நகரம் நகரமாக, ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அரசின் சார்பில் கண்ணொளி வழங்கப்பட்டது. கை, கால் ஊனமுற்றவர் களுக்கு சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இவைகளை யெல்லாம்விட உத்தமர் காந்தியடிகள் ஒன்றைச் சொன்னார். சுதந்திரத்திற்கு முன்பே சொன்னார். சென்னைக்கு வந்தார், திருச்சிக்குச் சென்றார், மதுரைக்குச் சென்றார். கல்கத்தா போனார், இங்கே எல்லாம் மனிதர்களை உட்கார வைத்து மனிதர்கள் இழுக்கின்ற கைரிக்ஷா வண்டிகளைப் பார்த்தார். மனிதன் உட்கார்ந்திருப்பான். மனிதன் இழுப்பான். அந்த ரிக்ஷாக்களைப் பார்த்து சொன்னார். இதைவிட மகா பாவம், கொடுமை உலகத்தில் வேறு எதுவும் கிடையாது என்று சொன்னார். சுதந்திரம்கூட பிறகு வாங்கிக் கொள்ளலாம். முதலில் மனிதர்களை வைத்து மனிதன் இழுக்கின்ற அந்தப் பாவத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார். அவர் மறைந்தார். சுதந்திரம் கிடைத்த சில நாட்களுக்கெல்லாம் அவரையே கொன்றுபோட்டார்கள். அவருடைய நினைவாக அவர் சொன்ன அந்த சொல்லை தாரக மந்திரமாக என்னுடைய இதயத்திலே பதிய வைத்துக் கொண்டிருந்த காரணத்தால்

அண்ணா மறைந்த பிறகு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் நான் வழங்கிய ஆணை தமிழ்நாட்டில் இருக்கின்ற மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை எல்லாம் ஒழிப்போம். அதை ஒழித்துவிட்டால் அந்த வேலையைப் பார்த்து பிழைத்துக் கொண்டிருந்தானே அவனுடைய கதி என்னாவது என்ற அந்தக் கேள்விக்கும் நாங்களே பதிலளித்தோம், செயல்வடிவமாக.

அந்த ரிக்ஷாக்களுக்குப் பதிலாக அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்கிக் கொடுத்து பல்லாயிரக்கணக்கான வர்களுக்கு சென்னையிலிருந்து, கடலூரிலிருந்து, கோயம்புத் தூரிலிருந்து, திருச்சியிலிருந்து, மதுரையிலிருந்து அங்கெல் லாம் மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷா கொடுமையைத் தவிர்த்து அவர்களுக்கெல்லாம் இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கி ஒரு புரட்சிகரமான திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகச் செய்த ஆட்சி தி.மு.கழக ஆட்சி. அடியேன் முதலமைச்சராக இருந்தபொழுது நடத்தப் பட்ட காரியம் அது.

அது மாத்திரம் அல்ல, ஏழை எளியோர்களுடைய வீடுகளில் திருமணம் ஆகாமல் இருக்கின்ற பெண்களுக்கு ஏன் திருமணம் ஆகவில்லை. திருமணத்திற்கான செலவுக்கு பண வசதி இல்லை. ஐயாயிரம், பத்தாயிரம் இல்லாமல் திருமணம் செய்ய முடியுமா? இந்தக் கேள்விக்கு பதில் கிடைத்தாக வேண்டும் என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்தப் பதிலையும் செயல்வடிவத்தில் கொடுத்தோம்.

திருமண உதவித் திட்டத்தையே தீர்த்துக் கட்டிவிட்டார்கள்

1996 முதல் 2001 வரையில் தி.மு.கழக ஐந்தாண்டு கால ஆட்சியில் மாத்திரம் ஏழை எளிய வீட்டுப் பெண்கள் திருமணம் என்றால் 10,000 ரூபாய் அரசாங்கச் சார்பில் நிதியாகத் தந்து அப்படிக் கொடுக்கப்பட்ட பணம் 228 கோடி ரூபாய் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகள் எல்லாம் இப்போது எங்கே? திருமண உதவித் திட்டம் என்ன ஆயிற்று? பத்தாயிரம் ரூபாய் திருமண உதவியாக அப்போது கிடைத்தது. இன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்கு சைக்கிளை வாங்கிக் கொடுத்து விட்டு அதுவும் மத்திய சர்க்காருடைய பணத்திலே வாங்கிக் கொடுத்துவிட்டு நான் கொடுத்தேன், நான் கொடுத்தேன் என்று மார் தட்டிக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது. அந்தத் திருமண உதவித் திட்டம் என்ன ஆயிற்று என்று கேட்டால் திருமணம் என்றால் என்ன என்று கேட்பவர்களுடைய கையிலே ஆட்சி இருக்கின்ற காரணத்தால் அந்தத் திருமண உதவித் திட்டமே தீர்த்துக் கட்டப்பட்டு விட்டது.

அ.தி.மு.க. அரசுக்கு நாடாளுமன்ற தேர்தலில் முட்டை கிடைத்த பிறகுதான் குழந்தைகளுக்கு முட்டை கிடைத்தது

எந்த ஒரு திட்டமானாலும் நன்மையானாலும் சாதனை யானாலும் அது ஏழை எளியவர்களையே சுற்றிச் சுற்றி வருகிற, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண வேண்டும் என்ற தத்துவார்த்தத்தின் சின்னமாக தி.மு.கழக ஆட்சி நடத்தப்

பட்டது. இன்றைக்கு அவைகளுக்கெல்லாம் மூடு விழா செய்யப்பட்டுவிட்டது. இங்கே துரைமுருகன் குறிப்பிட்டதைப் போல நம்முடைய அருமை நண்பர் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார், ஏழைக் குழந்தைகளுக்கு. எம்.ஜி.ஆர். கொண்டு வந்த திட்டமாயிற்றே என்பதற்காக நான் முதலமைச்சராக ஆனதும் அதை நிறுத்தி விடவில்லை, ரத்து செய்துவிடவில்லை. எப்பொழுதும் முதலிலே இருக்கிற ஆட்சி செய்கிற நன்மையைத் தொடர்ந்து வரும் ஆட்சி இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்வதுதான் முறை. அது தான் ஆட்சிக்கு லட்சணம்.

எம்.ஜி.ஆர். சத்துணவு கொடுத்தார் என்றால் அதை இன்னும் அதிகமாக சத்துள்ள உணவாக ஆக்க வேண்டும் என்பதற்காக வாரத்திற்கு ஒரு முட்டை சேர்த்துக் கொடுங்கள் என்று உத்தரவிட்டவன் கருணாநிதி.

இவர்கள் வந்தார்கள் ஆட்சிக்கு. யார் முட்டை கொடுக்கச் சொன்னது கருணாநிதியா? நிறுத்து முட்டை வேண்டாம். இனி மேல் கொடுக்காதே என்று. அப்படிக் கொடுக்கப்பட்டு வந்த முட்டையை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் முட்டை குழந்தை களுக்கு எப்போது கிடைத்தது தெரியுமா? இந்த ஆட்சியை நடத்தும் கட்சிக்கு நாடாளுமன்றத் தேர்தலில்; தேர்தல் முடிவு ஒரு முட்டையாகக் கிடைத்த பிறகுதான் குழந்தைகளுக்கு மீண்டும் முட்டை கிடைத்தது. இப்படிப் பல சொல்லலாம்.

கழக ஆட்சியில் எங்களுடைய தலைமையிலே, தங்களுடைய அமைச்சரவையிலே நடத்திய சாதனைகளை

நிறுத்தி மக்களைச் சங்கடத்திற்கு ஆளாக்கி; அவர்கள் – தங்களுடைய சலுகைகளை, உரிமைகளையெல்லாம் பறித்துக் கொண்டீர்களே என்று அழுது புலம்பிய போது, அழுது கேட்டாலும் தர முடியாது, தொழுது கேட்டாலும் தர முடியாது என்று கூறி கோரிக்கை வைத்தவர்களை யெல்லாம் சிறைச் சாலையிலே வைத்த ஆட்சிதான் ஜெயலலிதா ஆட்சி.

அரசு அலுவலர்களுக்கு படிப்பறிவு மட்டுமல்ல; பட்டறிவும் இருக்கிறது

இன்றைக்கு அரசாங்க அலுவலர்களுக்கு, அவர்களிட மிருந்து பறித்த சலுகைகளையெல்லாம் திரும்பத் தருகிறோம் என்று சொல்கிறார்கள்.

பொன்முடி சொன்னதைப் போல், விரலை விட்டு வாந்தி எடுத்து விட்டு, ஏன் வாந்தி எடுத்தாய் என்று கேட்டால், அதெல்லாம் கருணாநிதி போட்ட சோறு, ஆகவே வாந்தி எடுக்கிறோம் என்று கூறி, அது தங்கள் வயிற்றில் இருக்கக் கூடாதென்று வாந்தி எடுத்து விட்டு, இப்போது பசி வந்தவுடன் பரவாயில்லை, பசிக்கிறதே என்ன செய்யலா மென்று, அதே வாந்தியை எடுத்து வாயிலே போட்டுக் கொள்வதைப் போல பறித்த சலுகைகளை எல்லாம் இப்போது தருகிறோம், வாருங்கள், வாருங்கள், ரத்து செய்த உரிமைகளையெல்லாம் மீண்டும் தருகிறோம், வாருங்கள், வாருங்கள் என்று அழைத்தால் யார் நம்புவார்கள்?

நீங்கள் இப்போது தருவீர்கள், நாளைக்கு பிடுங்கிக் கொள்வீர்கள். நாம் பாட வேண்டியது தான், "கொடுத்தவனே

எடுத்துக் கொண்டாண்டி'' என்று! அவ்வளவு அறிவில்லாத வர்களா அரசு அலுவலர்கள்? அவர்களுக்கு அனுபவ அறிவு கிடையாதா? படிப்பறிவு, பட்டறிவு என்பதில் பட்டறிவைப் பற்றி சிலாகித்துப் பேசுவார்கள். அரசு அலுவலர்களுக்கு படிப்பறிவும் இருக்கிறது, பட்டறிவும் இருக்கிறது, உங்களிடம் பட்ட அறிவு!

எத்தனை பேரை சிறைச்சாலையிலே போட்டுப் பூட்டினீர்கள்? எங்கேயாவது உலகத்தில் எந்த நாட்டிலேயாவது கேட்கிறேன். ஏன் இந்தியாவில் எந்த மாநிலத்திலாவது கேட்கிறேன். ஒரே நாளில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் அரசு அலுவலர்களை வீட்டிற்குப் போ என்று சொன்ன அநாகரிக அரசியல், காட்டுமிராண்டி அரசியல், எதேச்சாதிகார அரசியல் எங்கேயாவது காண முடியுமா?

ரஷ்யாவில் ரஸ்புதீன் யோசனையைக் கேட்டு, ஜார் இத்தகைய கொடுமையைச் செய்தது உண்டா? அவன் எவ்வளவோ கொடுமைகளை செய்தவன்தான். ஆனால் இத் தகைய கொடுமையைச் செய்ததாக கேள்விப்பட வில்லையே!

அந்தக் கொடுமையையும் செய்த காரணத்தால் தான், இப்போது தேர்தலுக்காக வாய் ஜாலம் பேசிக் கொண்டு பசப்பு வார்த்தைகளைப் பேசிக் கொண்டு, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்றெல்லாம் அறிக்கை மேல் அறிக்கை விட்டு, அதை சிலாகித்துப் பேச, எழுத, போற்ற, பாராட்ட சில பத்திரிகைகளையெல்லாம் விலைக்கு வாங்கிக் கொண்டு, பத்திரிகை அதிபர்கள் பல பேரை அடிமைகளாக ஆக்கிக் கொண்டு, எழுத்து சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு,

எழுத்துச் சுதந்திரத்தை கேட்கின்ற தகுதி இல்லாதவர்களாக அவர்களை யெல்லாம் ஆக்கி விட்டு, தாங்கள் சொன்னதைத் தான் எழுத வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு பத்திரிகை அலுவலகத்திலே இருக்கின்ற பேனா, அந்தப் பத்திரிகை அலுவலகத்திலே இருக்கின்ற ஆசிரியர் எடுத்து எழுத வேண்டிய பேனா. ஆனால் ஆசிரியர் கையிலே பேனா இருக்கிறது, அதைப் பிடித்து எழுதுவது ஜெயலலிதா என்றால் என்ன அர்த்தம்? இதை விட அநியாயம், இதைவிட பத்திரிகாதர்மத்திற்கு எதிரான காரியம் எங்கேயாவது நடைபெற்றிருக்க முடியுமா? நான் பத்திரிகையாளர்களைக் குறை கூறவில்லை. ஆனால் அவர்களின் நிலைமை இவ்வளவு பரிதாபகரமாக ஆகியிருப்பதற்கு என்ன காரணம்?

கடந்த வாரம் வெளியிட்ட கருத்துக் கணிப்பை இந்த வாரம் அப்படியே மாற்றுகிறார்கள்! கடந்த வாரம் கருணாநிதி தான் முதல் அமைச்சர் ஆவாரென்று கருத்துக் கணிப்பு வெளி யிட்டார்கள். இந்த வாரம், அதற்குள்ளாகவே, ஜெயலலிதா தான் முதல் அமைச்சர் ஆவார், கருணாநிதிக்கு வாய்ப்பு இல்லை என்று எழுதுகிறார்கள். நான் பத்திரிகையாளர்களைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அவர்கள் அந்த அளவிற்கு மடக்கப்பட்டு விட்டார்கள். நல்ல ஆரூடக்காரர்கள்தான் அவர்கள். நல்ல கெட்டிக்காரர்கள்தான் அவர்கள். நல்ல சாமர்த்தியசாலிகள் தான் அவர்கள். கணக்கிலே புலிகள் தான் அவர்கள். ஆனால் நான் சொன்னபடி கணக்கின் கூட்டுப் புள்ளியைச் சொல் என்று அவர்களுக்கு நேராக கத்தி நீட்டப்

படுவதைப் போல, சர்க்காரின் அதிகாரம் நீட்டப்படுகிறது. ஆகவே அவர்கள் இந்த வாரம் கருணாநிதிக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். கருணாநிதிக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியவர்கள், எதிரே அமர்ந்திருக்கின்ற இலட்சக்கணக் கான, பல்லாயிரக்கணக்கான மக்கள் அல்லவா?

கிடைத்த ஆதிக்கத்தை விட்டுவிடக் கூடாது என்பதற்காக ஏதேதோ எழுதுகிறார்கள்

ஒரு பிரச்சாரம் – கருணாநிதி தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று! ஏன், அவர் கடந்த தேர்தலிலேயே அந்தத் தேர்தல்தான் அவருக்கு கடைசி தேர்தல் என்று சொன்னார் என்கிறார்கள். ஆமாம், நான் சொன்னேன். ஏனென்றால் என்னுடைய வயது அவ்வளவு. இப்போது 82 வயது ஆகிறது. அதனால் எவ்வளவு நாள் இருக்கப் போகிறோம் என்று நினைத்துச் சொன்னேன். ஆனால் என்னுடைய வயது பெரியாரின் வயது மாதிரி வளர்கிறது. நான் என்ன செய்ய முடியும்?

கருணாநிதி முதல் அமைச்சர் பதவியை விரும்பவில்லை, போட்டி போடப் போவதில்லை என்று ஒரு செய்தியைப் போடுகிறார்கள். இவர்கள் இப்படிச் சொல்வது எதற்காகத் தெரியுமா? நான் முதலமைச்சராக ஆகக் கூடாது என்பதற் காகக் கூட அல்ல! எப்படியாவது அந்த ஆதிக்கத்தை, ஏதோ தப்பித் தவறி வந்த ஆதிக்கத்தை விட்டு விடக் கூடாது, இந்த வாய்ப்பு போனால் மறு வாய்ப்பு கிடைக்காது, இந்த வாய்ப்பை

விட்டு விட்டால் பிறகு காலா காலத்திற்கும் தமிழ்நாட்டில் சூத்திரர்கள் ஆளக்கூடிய நிலைமை வந்து விடும், ஆகவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் அவர் நிற்க மாட்டார், இவர் நிற்க மாட்டார் என்றெல்லாம் சொல்கிறார்கள். நீங்கள் தயவு செய்து அதைப்பற்றி கவலைப் படாதீர்கள்.

எட்டு ரூபாய், ஏழு ரூபாய் கொடுத்து வாங்குகின்ற வார இதழிலே இவர்களுடைய கற்பனைகளையெல்லாம் செய்தி களாக ஆக்குகிறார்கள். இவர்கள் இட்டுக் கட்டுவதை யெல்லாம் சித்திரங்களாக வரைகிறார்கள், எதிர்காலம் இது தான் என்று சொல்கிறார்கள். நான் பாரதிதாசன் அவர்களின் பாட்டைத்தான் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். "காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீ தான்! பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகை பெண்ணே!'' என்று பத்திரிகையை ஒரு பெண்ணாகப் பாவித்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாராட்டிய பத்திரிகை, தற்போது காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாக இல்லை, கதிரொளியை மறைக்க விரும்புகிற காரிருளாக மாறலாமா? என்று தான் நான் பத்திரிகை நண்பர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தோழமை உணர்வோடு கேட்கிறேனே அல்லாமல், வெறுப்பு உணர்வோ டோ, விரோத உணர்வோடோ அல்ல. நானும் ஒரு பத்திரிகைக் காரன், இன்று நேற்று முதல் அல்ல, 1942ஆம் ஆண்டு முதல் "முரசொலி'' என்கின்ற துண்டுத்தாள், கையேடு நடத்திய அந்தக் காலத்திலிருந்து சுமார் அறுபத்தைந்து ஆண்டு

காலமாக நானும் பத்திரிகைக்காரன்தான். ஆகவே பத்திரிகைக்காரர்களுக்கு வருகின்ற அவமானம் எனக்கும் வந்ததைப் போலத்தான்! பத்திரிகைக்காரர்களுக்கு வருகின்ற சோகம் எனக்கு வருகின்ற சோகம் தான். பத்திரிகைக்காரர் களுக்கு வருகின்ற கஷ்டம் எனக்கு வருகின்ற கஷ்டம்தான் என்று எண்ணிக்கொள்ளக் கூடியவன்தான் நான். பத்திரிகை நடத்திய காரணத்தினால் தான், பத்திரிகையில் அரசுக்கு விரோதமாக எழுதிய காரணத்தால்தான், மொழிப்போரில் பாளையங்கோட்டையிலே சிறை வைக்கப்பட்டேன். நான் மாத்திரமல்ல, என் மருமகன் முரசொலி மாறன் சிறை பிடிக்கப்பட்டார், முரசொலியிலே அரசுக்கு விரோதமாக எழுதினாரென்று! பத்திரிகையில் அரசுக்கு விரோதமாக எழுதக் கூடாது என்ற சர்வாதிகாரத்திற்கு பலியானவர்களில் ஒருவர் தான் இங்கே அமர்ந்திருக்கின்ற அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி. அரசுக்கு விரோதமாக எழுதினார் என்று கூறி தந்தை பெரியார் திருச்சி சிறையிலே வைக்கப்பட்டார். அரசுக்கு விரோதமாக ஆர்யமாயை எழுதினார் என்ற காரணத்திற்காக அறிஞர் அண்ணா திருச்சி சிறையிலே வைக்கப்பட்டார். நல்லவேளை அப்போது பெரியாருக்கும் அண்ணாவிற்கும் இடையிலே கொஞ்சம் ஊடல்! இருவரும் ஒரே சிறைச் சாலையிலே வைக்கப்பட்டு, அந்த ஊடல் தீருவதற்கு அன்றைக்கு இருந்த அரசு காரணமாக இருந்தது. இப்படி யெல்லாம் தொடர் தொல்லைகளை அனுபவித்த பத்திரிகை உலகத்தைச் சேர்ந்தவர்கள்தான் நாங்களும்! திராவிட இயக்கம் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் பத்திரிகை

துறையிலும் நாங்கள் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறோம். அப்படிப்பட்ட இந்த இயக்கம் இன்றைக்கு மக்கள் உரிமைகளுக்காக, அரசு ஊழியர்களுக்காக, ஆசிரியர்களுக்காக, விவசாயிகளுக்காக, நெசவாளர்களுக்காக, மீனவர்களுக்காக, மாணவர்களுக்காகப் பாடுபடுகின்ற, பணியாற்றுகின்ற இயக்கம் தான்.

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு நான் சென்ற போது, சேலம் மாவட்டத்தில், நெசவாளர்கள் எல்லாம் கூடி நின்று, சென்வாட் வரி எங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது, அதை யார் போட்டது தெரியுமா? வாஜ்பாய் பிரதமராக இருந்த போது விதித்த வரி. அது எங்களை வாட்டுகிறது. நீங்கள் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால், அந்த வரியை நீக்குவீர்களா என்று கேட்டார்கள். நான் சொன்னேன், நாங்கள் வெற்றி பெறப் போவதும் நிச்சயம், அந்த வரியை நீக்கப் போவதும் நிச்சயம் என்று திருச்செங்கோடு பொதுக் கூட்டத்தில் சொன்னேன். வெற்றி பெற்றோம், நாற்பதுக்கு நாற்பது என்று வெற்றி பெற்றோம், கூட்டணி ஆட்சி அமைத்தோம், குறைந்த பட்சத் திட்டத்தை வகுத்தோம், அதிலே ஒன்றாக நெசவாளர்களுக்கு விதிக்கப்பட்ட சென்வாட் வரி நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம், அவ்வாறே அந்த வரி நீக்கப்பட்டது. நெசவாளர்கள் மனம் குளிர்ந்தார்கள்.

அந்தக் குறைந்தபட்சத் திட்டத்திலே ஒன்று தான் தமிழை செம்மொழியாக ஆக்க வேண்டுமென்ற நூறாண்டு கால கனவு. சூர்யநாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர் காலத்தி

லேயிருந்து கேட்கப்படும் கோரிக்கை தான் தமிழ் செம்மொழி யாக ஆக வேண்டும் என்பது. சங்கத் தமிழ், தங்கத் தமிழ், அவ்வை பாடிய தமிழ், கம்பன் கண்ட தமிழ், வள்ளுவன் குறள் இயற்றிய தமிழ் – அந்தத் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடையாதா என்று நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த கேள்விக்கு, விடை காண முடியாமல், தமிழகத்திலே உள்ள புலவர் பெருமக்கள் தவித்துக் கொண்டிருந்த போது, நீங்கள் தந்த வெற்றியினால், நீங்கள் எங்களை மத்தியிலே கொண்டு போய் அமர்த்திய காரணத்தால், எங்களில் சிலரை மத்தியிலே அமைச்சர்களாக ஆக்கியதால், தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 பேர், 13 பேர் அங்கே அமைச்சர்களாக இருக்கின்ற ஒரே காரணத் தால், தமிழ் செம்மொழி ஆயிற்று. அதே காரணத்தால் தான், அந்த 13 அமைச்சர்களின் பணியினால் தான் சேது சமுத்திரத் திட்டம் கிடைத்துள்ளது. அந்தத் திட்டத்திற்கு அண்ணா குரல் கொடுக்கவில்லையா? பெரியார் குரல் கொடுக்கவில்லையா? பெருந்தலைவர் காமராஜர் குரல் கொடுக்கவில்லையா? எத்தனை தலைவர்கள் இன்றைக்கு இந்தக் கூட்டணியிலே இருக்கின்ற அத்தனை தலைவர்களும், நூறாண்டு காலமாக பழம்பெரும் தலைவர்கள் முதற்கொண்டு இதுவரையில் அத்தனை பேரும் குரல் கொடுத்து, ஆகாமல் இருந்த திட்டம், சேது சமுத்திரத் திட்டம், தமிழகத்தையே வளமாக ஆக்கக் கூடிய திட்டத்தை இப்போது நிறைவேற்றியது யார்? மத்திய கூட்டணி சர்க்கார் அல்லவா? அந்த மத்திய சர்க்காரிலே இருக் கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 அமைச்சர்கள் அல்லவா?

இப்படி திட்டங்களுக்கு மேல் திட்டங்கள், தமிழகத்திற்கு மத்தியிலே இருக்கின்ற அரசினால் அறிவிக்கப்படுகின்ற இந்தக் காலக் கட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை நம்முடைய தம்பி டி.ஆர். பாலு அமைச்சராக இருந்து, அதைத் தீவிரமாக நடத்திக் கொண்டு வருகின்ற இந்தக் காலக் கட்டத்தில், "செல்போன்" என்ற தொலைபேசிகளை, அந்தத் துறையின் பொறுப்பை யேற்றிருக்கின்ற தம்பி தயாநிதி மாறன், ஏழைகளுக்கும் அந்த வசதி கிடைக்கக் கூடிய அளவிற்கு கொண்டு வந்துள்ள இந்தக் காலக் கட்டத்தில், இன்னும் சொல்லப் போனால், காஷ்மீரி லிருந்து கன்னியாகுமரி வரையில் இனிமேல் தொலைபேசியில் ஒரு நிமிடம் பேச முன்பெல்லாம் மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்றால், ஒரே இந்தியா, ஒரே கட்டணம், ஒரே ரூபாய் தான் என்று ஆக்கப்பட்டிருக்கின்றதென்றால், அது இந்த 13 பேருடைய சாதனை இல்லையா? இந்தக் கூட்டணியின் சாதனை இல்லையா?

தி.மு. கழக ஆட்சியிலே நண்பர் வீராசாமி சொன்னதைப் போல எத்தனை தொழிற்கூடங்கள் இங்கே? எத்தனை தொழிற்சாலைகள்? உறஞ்ண்டாய் தொழிற்சாலை, ஏற்கனவே இருந்த அரசு பேசி முடிக்காமல் விட்டு விட்டுப் போன தொழிற்சாலை, நாங்கள் வந்த பிறகு கொண்டு வந்த தொழிற்சாலை அது.

அதற்கு முன்பிருந்த அரசு எத்தனையோ தொழிற் சாலைகளை கை விட்டுவிட்டது, வேறு மாநிலங்களுக்குச் செல்ல வழி விட்டுவிட்டது. இப்போதும் அதே நிலைமை தான்.

ரூ.13 ஆயிரம் கோடி தொழிற்சாலை திட்டத்தை பாழாக்கிவிட்டார்கள்

நான் ஒன்றிரண்டை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நேற்றைக்குக் கூட மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். 13,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகத்திற்கு வர வேண்டிய ஒரு தொழிற்சாலை, தயாநிதி மாறன் துறையைச் சேர்ந்த தொழிற்சாலை – இங்குள்ள தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு இரண்டு முறை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் கடிதம் எழுதியும் கூட, அந்தக் கடிதத்திற்கு ஜெயலலிதா பதிலே எழுதவில்லை. அதன் காரணமாக செம் இந்தியா என்ற நிறுவனத்தின் சார்பில் "செமி கண்டக்டர்கள்'' தயாரிக்கின்ற தொழிற்சாலை – தயாநிதி மாறன் அமெரிக்கா சென்ற போது, அந்தத் தொழில் அதிபர்களிடம் பேசி, அதை தமிழகத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டு, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்க அந்த நிறுவனம் தயாராக இருந்த போதும், அதைப் பற்றி தயாநிதி மாறன் முதல் அமைச்சருக்கு இரண்டு கடிதங்கள் எழுதியும் எந்தக் கடிதத்திற்கும் பதிலே வரவில்லை. வேறு வழி இல்லாமல், அந்த நேரம் பார்த்து, இந்தச் செய்தியை தெரிந்து கொண்ட ஆந்திர முதல் அமைச்சர், அந்த மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு டெல்லியில் தயாநிதி மாறனைச் சந்தித்து, அந்தத் தொழிற்சாலையை ஆந்திராவிற்கு தாருங்கள் என்று கேட்டு, அவரும் அதை ஆந்திராவிற்கு வேறு வழியின்றி அனுப்பி

வைத்து விட்டாரென்றால், தமிழகத்திற்கு வர வேண்டிய 13,500 கோடி ரூபாய் திட்டத்தை பாழாக்கிய பாவிகள் யார்? அந்தத் திட்டம் வந்தால் எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்திருக்கும்? அந்த வேலை வாய்ப்பைக் கெடுத்தது யார்? (கூட்டத்தினர் "ஜெயலலிதா'' என்று கூறுகிறார்கள்)

இன்னொன்று, "அப்பாச்சி'' விளையாட்டு வீரர்களுக்கான ஷூக்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலை. "அடிடாஸ்'' என்ற பெரிய கம்பெனி. இவர்கள் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில் ஒரு தொழிற்சாலையை தொடங்க முன் வந்தார்கள். அந்தத் தொழிற்சாலை இங்கே அமைந்தால் இருபதாயிரம் பேருக்கு வேலை கிடைத்திருக்கும். ஆனால் ஜெயலலிதா அரசு அந்தத் தொழிற்சாலை தொடங்க ஒத்துழைப்பு தர முன் வராத காரணத்தால், அந்தத் தொழிற்சாலையும் தற்போது அண்டை மாநிலமான ஆந்திராவிற்குப் போய் விட்டது.

நேற்றைக்கு கர்நாடக மாநில புதிய முதல்வர் சொல்கிறார். தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தொழிற்சாலை ஆந்திராவிற்கு போய் விட்டதாகச் சொல்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை ஆந்திராவிற்கும் வேண்டாம், தமிழ்நாட்டிற்கும் வேண்டாம், ஏனென்றால் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள், ஆந்திராவில் நக்சலைட்கள் இருக்கிறார்கள், ஆகவே அந்தத் தொழிற்சாலையை கர்நாடகத்திற்கு தாருங்கள், இங்கே அனைத்து வசதிகளையும் செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார் என்றால், இதைப் பற்றி தமிழ்நாட்டு முதல்

அமைச்சர் வாய் திறந்திருக்கிறாரா? இங்கே விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்க வேண்டாமா? விடுதலைப் புலிகள் எப்போதோ இருந்தார்கள், இப்போது இல்லை என்று சொல்ல வேண்டாமா முதல் அமைச்சர். அதிகாரபூர்வமாக பதிலளிக்க வேண்டாமா? சொன்னவர் சாதாரணமானவர் அல்லவே! பக்கத்து மாநில முதல் அமைச்சர் அல்லவா? புதிய முதல் அமைச்சர் குமாரசாமி தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள், ஆகவே அந்தத் தொழிற் சாலையை எங்கள் மாநிலத்திற்குத் தாருங்கள் என்று கேட்கிறார். அதை மறுத்துப் பேச தமிழக முதல்வருக்கு முடியவில்லை. ஏன் விடுதலைப் புலிகள் என்றால் உங்களுக்குப் பயமா? இந்த அம்மையாருக்குத் தான் பயம் கிடையாதே!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சட்டப்பேரவையில் விடுதலைப் புலிகளையெல்லாம் விரட்டியே தீருவேன், விடுதலைப் புலிகள் துரோகிகள், அவர்களுக்கு தமிழ்நாட்டில் எள்ளளவு இடமும் தர மாட்டேன் என்று நீட்டி முழக்கிய இந்த வீராங்கனை ஏன் இப்போது கர்நாடக முதல்வரின் கூற்றுக்கு பதில் சொல்லாமல் ஓடி ஒளிகிறார். அப்படி ஒன்றும் விடுதலைப் புலிகள் இங்கேயில்லை, அவர்களால் தொழில் வளருவது ஒன்றும் கெடாது என்று சொல்லியிருக்க வேண்டாமா? தயவு செய்து எண்ணிப் பாருங்கள்.

இன்னொன்று, ஐ.ஈ.எம்.சி., என்ற தொழில் நிறுவனம் எலெக்ட்ரானிக் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற் சாலையை தொடங்க வந்தவர்கள் இங்கே படாதபாடுபட்டு, முயற்சியிலே

ஈடுபட்டு, கடைசியிலே அவர்கள் கடிதம் எழுதுகிறார்கள். என்ன கடிதம் தெரியுமா?

"My two visits to Chennai, three meetings with various Tamil Nadu Officials as well as hundreds of Phone calls and e-Mails have provided no positive results"

அதாவது நாங்கள் எலெக்ட்ரானிக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழகத்திலே தொடங்க முயற்சித்தோம். அதற்காக சென்னைக்கே இரண்டு முறை வந்து, மூன்று முறை தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்தோம், அது மாத்திரமல்ல, நூற்றுக்கணக்கான தொலைபேசிகள் செய்து பேசினோம், இ.மெயிலில் கடிதங்களை அனுப்பினோம், இவ்வளவு செய்தும் சாதகமான முடிவு எங்களுக்குக் கிடைக்கவில்லை, ஆகவே நாங்கள் வேறு மாநிலத்திற்குச் செல்லவிருக்கிறோம் என்று கடிதத்திலே குறிப் பிட்டிருக்கிறார்கள்.

நான் முதலில் சொன்ன "அப்பாச்சி'' நிறுவனம், செம் இந்தியா நிறுவனம் போன்றவை தமிழ்நாட்டிற்குக் கிடைக்கா தது பற்றி "எகானமிக் டைம்ஸ்'' என்ற பொருளாதார ஏட்டில் என்ன எழுதியிருக்கிறார்கள் தெரியுமா?

"If it was the Rs. 500 crore Apache Footwear Project last month, it is the 3 billion dollar Fab City Project of Sem India this month. In both cases, Tamil Nadu's loss has been Andhra Pradesh's gain" என்று "எகானமிக்

டைம்ஸ்'' இதழில் கோவர்தன் என்பவர் எழுதுகிறார் – 500 கோடி ரூபாய் மதிப்புள்ள காலணி தயாரிக்கும் தொழிற்சாலை கடந்த மாதம் கை நழுவிப் போயிற்று என்றால், இந்த மாதம் 3 பில்லியன் டாலர் மதிப்பிலான செம் இந்தியா தொழிற்சாலை போய் விட்டது. இந்த இரண்டிலும் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்ட நட்டம், ஆந்திராவிற்கு இலாபமாக மாறியுள்ளது என்று எழுதியிருக்கிறார்.

அந்தத் தொழிற்சாலைக்கு உரியவர்கள் எல்லாம் வருத்தப் பட்டு சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவோ முயற்சித்தும் இங்கேயுள்ள முதல் அமைச்சரை ஒப்புக் கொள்ள செய்ய முடியவில்லை. முதல் அமைச்சர் அதிகாரிகளையும், அந்தத் துறையின் அமைச்சரையும் சந்திக்கச் சொன்னார். அதன்படி அவர்களைச் சந்தித்த போது, என்ன சொன்னார்கள் தெரியுமா? ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில் தொழிற்சாலையைத் தொடங்குகிறீர்கள், இது தேர்தல் நேரம், கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால், அதைப் பற்றி நாங்கள் பேசுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் செலவிற்காக இவர்களுக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டுமாம். இதற்குத் தான் நீங்கள் 2001இல் வாக்களித்து, இந்த அம்மையாரை சிம்மாசனத்தில் உட்கார வைத்தீர்களா என்று எண்ணிப் பாருங்கள். கொடுக்க வேண்டியதை கொடுத்தால் தான் தொழிற்சாலை தொடங்க அனுமதி கொடுப்பார்களாம். தொழிற்சாலை கொடுத்தால் தான் உங்களுக்கு வேலை கிடைக்கும். உங்களுக்கு வேலை

கொடுக்க வேண்டுமென்றால், அமைச்சர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுக்க வேண்டும்.

ஆகவே கொடுக்க வேண்டியதைக் கொடுக்காத காரணத்தால், கெடுக்கக் கூடாததை யெல்லாம் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி உங்கள் வாழ்க்கையையே கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய தண்டனையை நீங்கள் கொடுக்க வேண்டிய காலம், வருகின்ற மே திங்கள். அந்த மே திங்களில் அந்தத் தண்டனையைக் கொடுத்து விட்டால் தமிழ்நாடு வாழும், தமிழர்கள் வாழ்வார்கள், தமிழ் நாட்டிலே இருக்கின்ற உழவர் பெருமக்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அன்றாடங் காய்ச்சிகள், குடிசைகளிலே வாழ்வோர் அத்தனை பேருக்கும் வாழ்க்கை குதூகலமாக அமையும். அப்படி அமைய உங்களையே நீங்கள் நீதிபதிகளாக ஆக்கிக் கொண்டு நீதி வழங்குங்கள், நல்ல ஆட்சி நடைபெற்றது, அதை வீழ்த்தி விட்டு 2001இல் பொல்லாத ஆட்சி வரக் காரணமாக நீங்களே படிக்கற்களாக அமைந்தீர்கள், அந்தத் தவறை உணர்ந்து, படிக்கற்களாக அமைந்து அவர்களை ஏற்றிவிட்ட என் அரும் தமிழ் மக்களே, தாய்மார்களே, என் உடன்பிறப்புகளே, ஏணிகளாக இருந்து அவர்களை ஏற்றி விட்ட நீங்கள் அந்த ஏணியிலிருந்து அவர்களை வீசி எறியுங்கள், புதிய தமிழகத்தைக் காணுங்கள், இந்தத் தேர்தல் பிரச்சார முதல் பொதுக் கூட்டத்தில் இந்த உறுதியை எடுத்துக் கொண்டு, தேர்தல் பிரச்சாரத்தின் வெற்றியாக, தேர்தல் வெற்றியாக,

தேர்தலிலே இந்தக் கூட்டணியின் வெற்றியாக, அந்த வெற்றிக் கனியைப் பறிப்போம் என்று செஞ்சிக் கோட்டைக்கு முன்னால் நின்று சபதம் ஏற்று உங்களிடமிருந்து விடைபெற்று கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

* * *



“ரத்த ஆறு ஓடியும் கிடைக்காத உரிமை
ஒரு துளி மையினால் கிடைத்தது”

